# DEPOSITION OF WITNESS
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, LALGUDI.
## Case No. CC.No. 51 of 2017
## Prosecution Witness : PW13

| | | | |
|---|---|---|---|
| **Name** | **: திருமதி. ரத்னாம்பாள்** | **Taluk** | **:** |
| **Father's Name** | **:** | **Calling** | **:** |
| **Village** | **:** | **Age** | **:** |

**(A1 to A4 absent. u/s 317 Crpc petition filed and allowed)**

**Dated. 17.07.2026**

**முதல் விசாரணை**

நான் கடைசியாக பெரம்பலூர் மாவட்டம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து கடந்த 30.06.2019 ம் தேதி பணி ஓய்வு பெற்று தற்போது புதுக்கோட்டை மாவட்டம் இழுப்பூரில் வசித்து வருகிறேன். வழக்கு சம்பவத்தின் போது இலால்குடி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வந்தேன். கடந்த 25.11.2015 ம் தேதி நிலைய குற்ற எண். 05/2015 இதச பிரிவுகள் 498 A, 406 ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு முதல் விசாரணை முடிக்கப்பட்டு மேல் விசாரணைக்காக வழக்கு கோப்பு எனது பார்வைக்கு வைக்கப்பட்டது. நான் வழக்கு கோப்பினை மேல் விசாரணைக்காக 25.01.2016 ம் தேதி எடுத்துக் கொண்டேன். காவல் ஆய்வாளர் மலர்கொடி தயார் செய்த மாதிரி வரைபடத்துடன் சம்பவ இடம் ஒத்திருந்ததால் நான் தனியாக மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்யவில்லை. காவல் ஆய்வாளர் மலர்கொடி விசாரணை செய்த சாட்சிகளை நான் விசாரணை செய்ததில்

அவரிடம் சொன்ன அதே வாக்குமூலத்தை என்னிடம் சொன்னதால் நான் தனியாக வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை. இவ்வழக்கில் கடந்த 31.08.2016 ம் தேதி புருஷோத்தமன், கார்த்திக் ஆகியோரை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பட்டியல் சாட்சி 14 உஷா மாவட்ட சமூக நல அலுவலர் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து அறிக்கை பெற்றேன். மாவட்ட சமூக அலுவலரால் கொடுக்கப்பட்ட அறிக்கையானது அ.சா.ஆ.13 ஆகும். சாட்சிகளின் விசாரணையிலிருந்து புகார்தாரரை 1ம் எதிரி அசிங்கமான வார்த்தைகளால் திட்டியும், அடித்தும், சீதனப் பொருட்களை வைத்துக் கொண்டு தர மறுத்துள்ளார் என்றும் 2ம் எதிரி புகார்தாரரை அசிங்கமான வார்த்தைகளால் திட்டியுள்ளார் என்றும், 3ம் எதிா புகார்தாரரின் நைட்டியை பிடித்து இழுத்து கிழித்தும், அசிங்கமான வார்த்தைகளால் பேசி அடித்துள்ளார் என்றும், எதிரிகள் அனைவரும் புகார்தாரரின் சீதன பொருட்களை வைத்துக் கொண்டு தர மறுத்துள்ளார்கள் என்றும் தெரிய வந்ததால் இவ்வழக்கின் சட்டப்பிரிவானது இதச பிரிவுகள் 498 A, 406 லிருந்து இதச பிரிவுகள் 294(b), 323, 354, 498 A, 406 ஆக மாற்றம் செய்து நீதிமன்றத்திற்கு சட்டப்பிரிவு மாற்றல் அறிக்கையை அனுப்பி வைத்தேன். அந்த சட்டப்பிரிவு மாற்றல் அறிக்கை **அ.சா.ஆ.14** ஆகும். என்னுடைய வழக்கு விசாரணையை முடித்து எதிரிகள் மீதான குற்றத்திற்கு போதிய ஆதாரம் இருந்ததால் 1ம் எதிரியின் மீது 294(b), 323, 498 A, 406 ன் கீழும், 2ம் எதிரியின் மீது 294(b), 498 A, 406 ன் கீழும், 3ம் எதிரியின் மீது 323, 354, 406 ன் கீழும், 4ம் எதிரியின் மீது 406 ன் கீழும் குற்ற இறுதி அறிக்கை தயார் செய்து கடந்த 31.08.2016ம் தேதி தாக்கல் செய்தேன்.

<u>குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில்)</u>

எனக்கு முன்பாக இருந்த காவல் ஆய்வாளர் புகார்தாரரிடமிருந்து 2 புகார் மனுக்களை பெற்று அதன் பேரில் புகார்தாரரையும், எதிரியையும் அழைத்து பேசி முடித்து வைத்துவிட்டார் என்றால் சரிதான். புகார்தாரரிடமிருந்து 2 மனுக்களை பெற்று 7 மாதங்களுக்குப் பிறகு தான் இந்த வழக்கின் புகார் பெறப்பட்டு எதிரிகள் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். நான் குற்ற இறுதி அறிக்கையுடன் புகார்தாரர் 2 வதாக கொடுத்த புகார் மனு, அந்த புகாரின் மேல் செய்யப்பட்ட விசாரணையில் எழுதி கொடுக்கப்பட்ட வாக்குமூலங்கள் ஆகியவற்றை இணைத்துள்ளேன் என்றால் எனக்கு ஞாபகமில்லை. புகார்தாரர் 2 வதாக கொடுத்த புகார் மனுவின்மேல் செய்யப்பட்ட விசாரணையில் இவ்வழக்கின் 1ம் எதிரி புகார்தாரருடன் சேர்ந்து வாழ தயாராக இருப்பதாகவும், பெரம்பலூரில் புகார்தாரருடன் தனிக்குடித்தனம் செல்ல தயாராக இருப்பதாகவும், ஆனால் புகார்தாரரின் பெற்றோர்கள் தான் அவரை அழைத்து சென்றதாக எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரிதான். ஆனால் 1ம் எதிரி புகார்தாரருடன் சேர்ந்து வாழ மறுத்துவிட்டார். 1ம் எதிரி புகார்தாரருடன் சேர்ந்து வாழ தயாராக இருந்தார் என்றாலும், புகார்தாரரின் பெற்றோர்கள் தான் அதற்கு அனுமதிக்கவில்லை என்றாலும் சரியல்ல. அ.சா.ஆ.13 ஆவணத்தில் எதிரிகள் புகார்தாரரை வரதட்சணை கேட்டு கொடுமைப்படுத்தவில்லை என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எதிரிகள் புகார்தாரரை வரதட்சணை கேட்டு கொடுமைப்படுத்தவில்லை என மாவட்ட சமூக நல அலுவலர் அறிக்கை கொடுத்துள்ள நிலையில் எதிரிகள் மீதான இதச பிரிவு 498 A நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. என்னுடைய விசாரணையில் பணம் கேட்டு

கொடுமைப்படுத்தியதாக புகார்தாரர் சொன்னார். இவ்வழக்கில் புகார்தாரர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதற்கான ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 3ம் எதிரி புகார்தாரரின் நைட்டியை கிழித்ததாக குற்ற இறுதி அறிக்கையில் குறிப்பிட்டுள்ள நிலையில் அந்த கிழிந்த நைட்டியை இந்த வழக்கில் கைப்பற்றினேனா என்றால் இல்லை. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் காலக்கட்டத்திற்கு ஏற்கனவே 2 புகார்கள் பெறப்பட்டு அதை சமாதானம் பேசி முடித்து வைத்த பிறகு அதே காலக்கட்டத்தில் நடந்த சம்பவத்திற்கு 7 மாதங்கள் கழித்து புகாரை பெற்று வழக்கு பதிவு செய்தது குறித்து எனக்கு முன்னால் இருந்த காவல் ஆய்வாளரை கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் கேட்டு தெரிந்து கொண்டேன். புகார்தாரர் எனது விசாரணையில் சீர்வரிசை பொருட்கள், நகைகளின் பட்டியல்களை கொடுக்கவில்லை என்றால் புகாரில் ஒரு இலட்சம் மதிப்புள்ள கட்டில், மெத்தை, பீரோ, சீர்வரிசசை பொருட்கள், 8 பவுன் தங்க நகைகள் என குறிப்பிட்டுள்ளார். பட்டியல் எதுவும் கொடுத்ததாக எனக்கு ஞாபகமில்லை. புகார்தாரர் அவருடைய சீர்வரிசை பொருட்களை பெற்றுக் கொண்டார் என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது. புகார்தாரர் அவருடைய சீர்வரிசை பொருட்களை பெற்றுக் கொண்டதால் அவர் எதிரிகளுக்கு எதிராக தாக்கல் செய்திருந்த ஜீவனாம்ச வழக்கு மற்றும் குடும்ப வன்முறை வழக்கு ஆகியவற்றை வாபஸ் பெற்றுக் கொண்டார் என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது. 16.04.2015– 16.05.2015 வரையிலான காலக்கட்டத்திற்கு பிறகு புகார்தாரரை எதிரிகள் எந்த கொடுமைக்கும் உட்படுத்தவில்லை என்றால் சரியல்ல. அவ்வாறு கொடுமை செய்திருந்தால் அதுகுறித்து புகாரிலோ, என்னுடைய விசாரணையிலோ சொல்லியிருப்பார் என்றாலும், அவ்வாறு நடக்காத

காரணத்தினால் தான் அதுகுறித்து புகாரிலோ, என்னுடைய விசாரணையிலோ சொல்லவில்லை என்றாலும் சரியல்ல. நான் இந்த வழக்கை சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது தவறுதலாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும், எதிரிகளுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

ஒப்பம்/−சு.அருணாச்சலம்,
நீதித்துறை நடுவர்,
இலால்குடி

/உண்மை நகல்/

ARUNACHALAM

Digitally signed by ARUNACHALAM
Date: 2026.07.17 12:46:41 +0530

நீதித்துறை நடுவர்,
இலால்குடி